# TRANSFORMATION PRAYER NETWORK - TAMILNADU

### இந்திய சுதந்திர தினத்திற்கான சிறப்பு ஜெபக்குறிப்புகள்

## இந்தியா

தலைநகரம்: புதுடெல்லி

மாநிலங்கள்: 28

யூனியன் பிரதேசங்கள்:8

மொத்த ஜனத்தொகை: 144.18 கோடி

மாவட்டங்கள்:788

கிராமங்கள்: 6,64,369

மக்கள் இனங்கள்: சுமார் 3665

பேசப்படும் மொழிகள்: சுமார் 1652

ஜனாதிபதி: திருமதி. திரௌபதி முர்மு

துணை ஜனாதிபதி: (தற்போது இல்லை)

பிரதம மந்திரி: திரு. நரேந்திர மோடி

தலைமை நீதிபதி: B.R. கவாய் ( 23 நவம்பர்'2025 வரை)

மக்களவை உறுப்பினர்கள்: 543

மாநிலங்களவை உறுப்பினர்கள்: 245

மக்களவை சபாநாயகர்: திரு. ஓம் பிர்லா

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர்: திரு. ராகுல்காந்தி

மாநிலங்களவைத் தலைவர்: (தற்போது இல்லை)

மாநிலங்களவைத் துணைத் தலைவர்: திரு. ஹரிவன்ஷ் நாராயண்சிங்

மாநிலங்களவை எதிர்க்கட்சித்தலைவர்: திரு. மல்லிகார்ஜூன கார்கே

இந்துக்கள்: 79.8%, முகமதியர்கள்: 14.2%, கிறிஸ்தவர்கள்: 2.3%,

சீக்கியர்கள்: 1.7%, பௌத்தர்கள்: 0.7%, ஜைனர்கள்: 0.4%, பிறமதம்: 0.65%,

மதம் இல்லாதோர்: 0.25%

## 1. துதிக்குறிப்புகள்:

- உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்திய தேசம் விளங்குவதற்காக தேவனை துதிப்போம்.
- இந்தியாவில் தேவன் தந்துள்ள இயற்கை வளங்கள், கனிம வளங்கள் மற்றும் வற்றாத ஜீவ நதிகளுக்காக தேவனை துதிப்போம்.
- விஞ்ஞானம், மருத்துவம், கல்வி மற்றும் தொழில் நுட்பத்துறை போன்ற பல்வேறு துறைகளில் முன்னேறி, வளர்ந்து கொண்டிருக்கும் நாடாக இந்தியா இருப்பதற்காக தேவனை துதிப்போம்.
- வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவத்தின் அடிப்படையில் மதச்சார்பின்மையும், ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட்டு வருவதற்காக தேவனை துதிப்போம்.
- எல்லைப்புற நாடுகளான பாகிஸ்தான் மற்றும் சீனா நாடுகளின் எல்லைப் பகுதிகளில் அத்துமீறல், ஊடுருவல் மற்றும் அடிக்கடி போர் பதற்றம் நிலவினாலும் கர்த்தர் சமாதானம் கட்டளையிட்டு வருவதற்காக தேவனை துதிப்போம்.
- இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான தோமாவை நம் தேசத்திற்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக தேவன் அனுப்பி வைத்ததற்காக தேவனை துதிப்போம்.
- அநேக மேலைநாட்டு மிஷனெரிகள் அர்ப்பணிப்புடன் நம் தேசத்தின் பல்வேறு மாநிலங்களிலுள்ள பட்டணங்கள் மற்றும் கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்ததோடு திரளான கல்விக்கூடங்களையும், மருத்துவமனைகளையும், சபைகளையும் நிறுவினதற்காக தேவனை துதிப்போம்.
- சுவிசேஷத்தை அறிவிக்க எதிர்ப்புகளும் தடைகளும் அதிகமாக இருந்தாலும் தேவன் இன்னும் நம் தேசத்தில் தந்துள்ள திறந்தவாசலுக்காக தேவனை துதிப்போம்.
- நம் தேசத்தில் சுவிசேஷத்தை அறிவித்து வரும் அனைத்து மிஷனெரி இயக்கங்கள் மற்றும் சபைகளுக்காகவும் அதன் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு வருவதோடு திரளான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

## 2. பொதுவான ஜெபக் குறிப்புகள்

- இந்தியாவை ஆளும் குடியரசுத் தலைவர், துணைத் தலைவர். பிரதமர், மாநில கவர்னர்கள், மாநில முதலமைச்சர்கள்,மத்திய,மாநில அமைச்சர்கள், மக்களவை, மாநிலங்களவை மற்றும் அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்களும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படும் படியும் ஜெபிப்போம்.
- தலைமை நீதிபதி மற்றும் நீதித்துறையில் அனைத்து மட்டத்திலும் உள்ள நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டு நீதி செய்யும் படியும் ஜெபிப்போம்.
- நம் தேசத்தின் ஜனாதிபதி, தனக்கு அரசியல் சாசனம் அளித்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் அமைப்புச் சட்டங்களையும், மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கும் படி ஜெபிப்போம்.

- இந்திய மக்களின் ஒருமைப்பாட்டிற்கும், மதச்சார்பின்மைக்கும், இறையாண்மைக்கும் இடையூறு விளைவிக்கும் எந்தச் சட்டங்களும் திருத்தப்படாமலும், புதிய சட்டங்கள் இயற்றப்படாமலும் இருக்கும் படி ஜெபிப்போம்.
- தேர்தல் ஆணையம், மத்திய புலனாய்வுத்துறை, நீதித்துறை, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை மற்றும் ரிசர்வ் வங்கி போன்ற தனித்த அதிகாரம் உள்ள துறைகளின் செயல்பாடுகளில் ஆட்சியாளர்கள் தலையிடாமலும், பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு அவைகளைப் பயன்படுத்தாமலிருக்கும் படியும் ஜெபிப்போம்
- பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கும் திட்டங்கள் தடுத்து நிறுத்தப்படவும், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை இந்திய அரசு கட்டுப்படுத்தும் படியும் ஜெபிப்போம்.
- உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள 70,154 வழக்குகளும், உயர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள 58,94,060 வழக்குகளும், மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள 4,10,47,976 வழக்குகளும் விரைவில் தீர்க்கப்பட்டு, மக்களுக்கு சரியான நேரத்தில் நீதி கிடைக்கும் படி ஜெபிப்போம்.
- ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான பத்திரிகை மற்றும் ஊடகங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்படவும், அவைகள் ஆட்சியாளர்களின் மிரட்டுதலுக்கு அஞ்சாமல் நேர்மையுடன் உண்மையான செய்திகளை வெளியிடும் படியும் ஜெபிப்போம்.
- மத்திய, மாநில அரசுகள் வேலையில்லாதோர்க்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பயனுள்ள திட்டங்களைக் கொண்டு வரும் படி ஜெபிப்போம்.
- பெருகிவரும் ஊழல், லஞ்சம், தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை, ஆள் கடத்தல், கொலை, கொள்ளை போன்ற சமுதாயச் சீர்கேடுகள் முற்றிலும் ஒழிக்கப்படும் படி ஜெபிப்போம்.
- பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள், பாலியல் பலாத்காரம், வன்கொடுமை போன்ற சமுதாய ஒழுக்கக் கேடுகள் கடுமையான சட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் முற்றிலும் ஒழிக்கப்படும் படி ஜெபிப்போம்.
- எல்லைப்புற நாடுகளான பாகிஸ்தான் மற்றும் சீனாவோடு இணக்கம் ஏற்பட்டு எல்லைப் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்க்கப்படவும், அண்டை நாடுகளுடனான நல்லுறவுகள் ஏற்படும் படியும் ஜெபிப்போம்.

## 3. கிறிஸ்தவர்களுக்கான ஜெபக்குறிப்புகள்:

- நம் தேசத்தில் உள்ள அனைத்து சபைகளிலும் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படவும், அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களைக் குறித்த பாரமும் கரிசனையும் ஏற்பட்டு சுவிசேஷத்தை அறிவித்திடவும், அநேக வாலிபர்கள் அர்ப்பணத்துடன் சுவிசேஷத்தை அறிவிக்க முன் வரும் படி ஜெபிப்போம்.
- நம் தேசத்தில் உள்ள அனைத்து மிஷனெரி இயக்கங்களுக்காகவும், 50,000 க்கும் அதிகமான மிஷனெரிகளுக்காகவும், 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட போதகர்கள் & சுவிசேஷகர்களுக்காகவும், அவர்களின் சரீர சுகம் & பெலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் ஜெபிப்போம்.
- எழுப்புதல் கூட்டங்கள் என்ற பெயரில் திருச்சபையின் புனிதத்தை கெடுக்கும் நூதன பொழுதுபோக்கு பிரசங்கிகளை திருச்சபை மக்கள் & போதகர்கள் பிறக்கணிக்கும் படி ஜெபிப்போம்.
- மதமாற்றத் தடைச் சட்டம் அமலில் உள்ள 10 மாநிலங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கான தடைகள் முற்றிலும் நீக்கப்படும் படி ஜெபிப்போம்.
- இந்தியாவில் உள்ள 6,64,369 கிராமங்களும் சுவிசேஷத்தினால் சந்திக்கப்படவும், பாவத்திலும் பிசாசின் அடிமைத்தனத்திலும் இருக்கும் மக்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டு, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் படி ஜெபிப்போம்.
- இரட்சிக்கப்படுகிறவர்கள் அனுதினமும் சபைகளில் சேர்க்கப்படவும், இந்திய தேசத்தில் மிக பெரிய எழுப்புதல் ஏற்படவும் ஜெபிப்போம்.
- ஊழியங்கள் பெருகவும், ஒவ்வொரு மொழி பேசும் மக்கள் இனங்கள் மத்தியிலிருந்தும் ஊழியர்கள் திரளாய் எழும்பவும் ஜெபிப்போம்
- இந்தியாவில் உள்ள சுமார் 10 கோடிக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருமைப்பாடு, அன்பு, ஐக்கியம் நிலவவும், ஒவ்வொருவரும் சாட்சியாய் வாழ்ந்து தேவனுக்கு சேவை செய்யும் படியும் ஜெபிப்போம்.
- தேசமெங்கும் சத்தியம் அறிவிக்கப்படவும், ஜனங்கள் மனந்திரும்புதலுக்கும், பரிசுத்த வாழ்வுக்கும் நேராக திரும்பவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.
- இந்தியாவில் 133 கோடி மக்கள் இயேசு இல்லாமல் வாழ்கின்றனர். இந்திய தேசத்தில் தடைகளை தாண்டி கிறிஸ்தவம் வியாபித்து பரவும் படி ஜெபிப்போம்.
- கிறிஸ்தவ திருச்சபைகள் சரியாக திட்டமிட்டு இந்த தேசத்தை கிறிஸ்துவுக்கு சொந்தமாக்கும் படி ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

## 4. சிறுவர்களுக்காக ஜெபிப்போம்:

(சங். 127:4, 148:12, மாற்கு 10:14, 5. 22:6)

- இந்தியாவில் சுமார் 37.24 கோடி சிறுவர்கள் உள்ளனர். சுமார் 2 கோடி சிறுவர்கள் தெருவில் வசிக்கின்றனர். சுமார் 3.5 கோடி சிறுவர்கள் குழந்தை தொழிலாளர்களாக உள்ளனர். இவர்களின் நல் வாழ்விற்காகவும், ஆத்தும மீட்புக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

## 5. வாலிபர்களுக்காக ஜெபிப்போம்:

(பிர. 12:1,7, 1யோ. 2:13,14)

- இந்திய மக்கள் தொகையில் 70% பேர் இளைஞர்கள். இதில் 25.5 % இளைஞர்களுக்கு வேலை இல்லை.
- இளம் வாலிபர்கள் பாவத்திலிருந்து விடுதலை பெறவும், வாலிப பருவத்தில் வரும் சோதனைகளை மேற்கொண்டு ஜெயிக்கவும், தேவ சித்தத்தை தங்கள் வாழ்வில் அறிந்து அதன்படி வாழவும், பெற்றோர்களை கனப்படுத்தவும்,நல்ல நண்பர்களுடன் நட்பு கொண்டு வாழவும், சமூக ஊடகங்கள், தொழில் நுட்ப சாதனங்களை ஞானமாய் பயன்படுத்தும் படியும் ஜெபிப்போம்.

## 6. பெண்களுக்காக ஜெபிப்போம்:

(நீதி. 14:1, 1தீமோ. 3:11)

- இந்தியாவில் சுமார் 65 கோடிக்கும் அதிகமான பெண்கள் உள்ளனர். வரதட்சணை கொடுமையினால் ஆண்டு தோறும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் உயிரிழந்து வருகின்றனர். பெண்களுக்கு எதிராக 4 லட்சம் வன்முறை வழக்குகள் ஆண்டு தோறும் பதியப்படுகிறது.
- பெண்களுக்கு உரிய கண்ணியம், உரிமைகள் கிடைக்கவும், பெண் குழந்தைகளுக்கு கல்வி தடையின்றி கிடைக்கவும், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் தடுக்கப்படவும், சமூகத்தில், பணி இடங்களில் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கும் படியும் ஜெபிப்போம்.

## 7. முதியோர்களுக்காக ஜெபிப்போம்:

(சங். 71:9, 148:12)

- இந்தியாவில் 60 வயதை கடந்த முதியவர்கள் சுமார் 10 கோடிக்கும் அதிகமாக உள்ளனர். இவர்களுக்கு நல்ல சரீர சுக பெலன் ஆரோக்கியத்தை தேவன் அருளிச் செய்யவும், நோய்களிலிருந்து விடுதலை பெறவும், அடிப்படை தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவம் போன்ற அனைத்தும் அவர்களுக்கு கிடைக்கவும்,பிள்ளைகள், உறவினர்கள் அவர்களை கைவிடாதிருக்கும் படியும் ஜெபிப்போம்.

## 8. வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்போம்:

(யாத். 23:25, மத். 4:23,24, யாக் 5:14, ஏசா 53:4)

- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் இலட்சக் கணக்கான மக்கள் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றனர். உயிர்க்கொல்லி வியாதிகளுக்கு தடுப்பு மருந்துகளும், சிகிச்சைக்கான மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவும், டெங்கு, மலேரியா, பன்றி காய்ச்சல், புற்று நோய், எய்ட்ஸ், கொரோனா போன்றவைகள் முற்றிலும் ஒழியும் படியும் ஜெபிப்போம்.

## 9. ஆதரவற்றோருக்காக ஜெபிப்போம்:

(சங். 146:9, யாத். 22:22)

- இந்தியாவில் சுமார் 728 முதியோர் இல்லங்கள் உள்ளன. இவற்றில் 325 இல்லங்களில் முதியோர்கள் இலவசமாக தங்கியுள்ளனர். சுமார் 1.5 கோடிக்கும் அதிகமானோர் ஆதரவற்றவர்களாக உள்ளனர். இவர்களின் நல் வாழ்விற்காகவும், ஆத்தும மீட்புக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

## 10. அகதிகளுக்காக ஜெபிப்போம்:

(சங். 9:9, 72:12)

- இயற்கைப் பேரிடர்கள், மதம், இனம், மொழி அடிப்படையிலான மோதல்கள், உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு யுத்தங்கள் போன்ற பலவேறு காரணங்களினால் இந்தியாவில் 58,843 இலங்கை அகதிகளும், 72,312 திபெத்திய அகதிகளும் உட்பட இலட்சத்திற்கும் மேலான அகதிகள் உள்ளனர். இவர்களின் நல் வாழ்விற்காகவும், ஆத்தும மீட்புக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

## 11. ஓரினச் சேர்க்கையாளர்களுக்காக ஜெபிப்போம்:

(ரோ. 1:21-28)

- இந்தியாவில் சமார் 25 லட்சதிற்கும் அதிகமான ஓரின சேர்க்கையாளர்கள் உள்ளனர், இவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. நவீன நாகரீக வாழ்வு முறை என இந்திய அரசு இதை அங்கீகரிக்காதிருக்கவும், தேவ சித்தத்தை அறியாது வாழும் இவர்களின் வாழ்வில் தேவ கரம் குறுக்கிடவும், திருச்சபைகளில் இவைகளை குறித்த வேதத்தின் அடிப்படையிலான தெளிவான போதனைகள் கற்றுக் கொடுக்கப் படும் படியும் ஜெபிப்போம்.

## 12. துர் உபதேசக்காரர்கள், கள்ளத் தீர்க்கதரிசிகளுக்காக ஜெபிப்போம்:

- பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு துர் உபதேசங்களை போதித்து கிறிஸ்துவின் திருச்சபையை பாழ்படுத்தும் மனிதர்கள் மனந்திரும்பவும், திருச்சபை ஆராதனைகளை மற்றும் தேவ செய்தியை பொழுதுபோக்காக மாற்றுவோர் மனந்திரும்பும் படியும், தவறான உபதேசங்கள் மற்றும் கள்ள தீர்க்க தரிசனங்களை பகுத்தறியும் கிருபைகளை விசுவாசிகளுக்கு தேவன் தரும் படியும், தவறான உபதேசங்களை பின்பற்றும் கிறிஸ்தவ போதகர்கள் மற்றும் விசுவாசிகளை அதினின்று தேவன் விடுவித்து, அவர்களை சத்தியத்தில் நடத்தும் படியும் ஜெபிப்போம்.

## 13. மோசடி மற்றும் ஏமாற்றுவோருக்காக ஜெபிப்போம்:

(யாத். 20:17)

- பொருளாதாரம் மற்றும் பிற மோசடி சார்ந்த வழக்குகள் இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 1.75,000 ற்கும் அதிகமாக பதிவாகின்றன. மக்களை ஏமாற்றி மோசடி செய்யும் மனிதர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படும் படி ஜெபிப்போம்.

## 14. சிறைக் கைதிகளுக்காக ஜெபிப்போம்:

(ஏசா. 5:13, 61:1)

- இந்தியாவில் உள்ள 1300-க்கும் அதிகமான சிறைச்சாலைகளில் சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான சிறைக் கைதிகள் உள்ளனர். பல்வேறு குற்றங்களுக்காக சிறையிலுள்ள இவர்களின் மனந்திரும்புதல் & இவர்களுடைய குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

## 15. சினிமா துறையினருக்காக ஜெபிப்போம்:

(மத். 14:6, லூக். 15:25)

- இந்திய சினிமா துறையில் சுமார் 20 இலட்சத்திற்கும் மேலான நடிகர் நடிகைகள் மற்றும் பிற பணியாளர்கள் உள்ளனர். ஆண்டுக்கு சுமார் 1500-கும் அதிகமான திரைப்படங்களை உருவாக்கி வெளியிடும் இவர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் படி ஜெபிப்போம்.

## 16. செல்வந்தர்களுக்காக ஜெபிப்போம்:

(சங்.49:16, நீதி.23:4, லூக்.12:21)

- இந்தியாவின் செல்வந்தர்களாக உள்ள 170 பேரிடம் இந்தியாவின் மொத்த சொத்து மதிப்பில் 40% உள்ளது. இவர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் படியும், இவர்களின் ஆத்தும மீட்புக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

## 17. விவசாயிகளுக்காக ஜெபிப்போம்:

(ஆதி. 26:12, எரே.10:13, சக. 10:1)

- இந்தியாவில் சுமார் 50% மக்கள் விவசாயிகளாக உள்ளனர். இயற்கைப் பேரிடர்கள், கடன் பிரச்சனை, நோய்த்தாக்குதல், வறட்சி என ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகின்றனர். இவர்களின் நல் வாழ்விற்காகவும், ஆத்தும மீட்புக்காகவும் ஜெபிப்போம்.

## 18. சேரிகளில் வாழ்வோருக்காக ஜெபிப்போம்:

(எபே. 6:18)

- இந்தியாவில் சுமார் 10 கோடிக்கும் அதிகமானோர் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சேரி பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழும் இவர்களின் நல் வாழ்விற்காகவும், ஆத்தும மீட்புக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

## 19. தெருவோரங்களில் வாழ்வோருக்காக ஜெபிப்போம்:

(ரோ.10:1)

- இந்தியாவில் சுமார் 17 இலட்சம் மக்கள் தெருவோரங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் பட்டணத்து வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களின் நல் வாழ்விற்காகவும்,ஆத்தும மீட்புக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

## 20. கிராமங்கள் & பட்டணங்களில் வாழ்வோருக்காக ஜெபிப்போம்:

(கொலோ.1:9)

- இந்தியாவில் சுமார் 90 கோடிக்கும் அதிகமான மக்கள் சுமார் 6 இலட்சத்திற்கும் அதிகமான கிராமங்களில் வசிக்கின்றனர்.சுமார் 50 கோடி மக்கள், 300-க்கும் அதிகமான பட்டணங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மெய் தேவனை கண்டு கொள்ளவும், அவரை சேவிக்கவும் முன்வரும் படியும் ஜெபிப்போம்.

## 21. பிச்சைக்காரர்களுக்காக ஜெபிப்போம்:

(கொலோ.3:12)

- இந்தியாவில் உள்ள சுமார் 4.13 இலட்சத்திற்கும் அதிகமான பிச்சைக்காரர்களின் நல் வாழ்விற்காகவும், ஆத்தும மீட்புக்காகவும் ஜெபிப்போம்.

## 22. விதவைகளுக்காக ஜெபிப்போம்:

- இந்தியாவில் சுமார் 4 கோடி விதவைகள் இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. கொரோனா காலத்து மரணங்களுக்கு பின்பு விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களின் நல்வாழ்விற்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்போம்.

## 23. போதைக்கு அடிமைப்பட்டுள்ளோருக்காக ஜெபிப்போம்:

(1யோ.1:9)

- இந்தியாவில் பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டுள்ள சுமார் 20 கோடிக்கும் அதிகமானோர் போதை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவும், இவர்களின் ஆத்தும மீட்புக்காகவும் ஜெபிப்போம்.

## 24. இந்துக்களுக்காக ஜெபிப்போம்:

(அப். 17:16,24)

- உலகில் வாழும் இந்துக்களில் 94% பேர் இந்தியாவில் உள்ளனர்.(சுமார் 96.63 கோடி) இவர்கள் மெய் தேவனை கண்டு கொள்ளவும், அவரை சேவிக்கவும் முன்வரும் படியும் ஜெபிப்போம்.

## 25. இஸ்லாமியர்களுக்காக ஜெபிப்போம்:

(2 தெச. 3:1)

- இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் சுமார் 18 கோடிக்கும் அதிகமாக உள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் இயேசுவின் அன்பை உணர்ந்து கொள்ளவும், அவர் தேவ குமாரனும், இரட்சகருமாய் இருக்கிறார் என்பதை புரிந்து, அவரை ஏற்றுக் கொள்ளும் படியும் ஜெபிப்போம்.

## 26. ஜைனர்களுக்காக ஜெபிப்போம்

- இந்தியாவின் மஹாராஷ்டிரா, குஜராத், ம.பி. மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் வாழும் 45 இலட்சம் ஜைனர்கள் மெய் தேவனை கண்டு கொண்டு, அவரை சேவிக்க முன்வரும் படியும் ஜெபிப்போம்.

## 27. பௌத்தர்களுக்காக ஜெபிப்போம்

- இந்தியாவின் லடாக், சிக்கீம், அருணாச்சல், டார்ஜிலிங், மஹாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் வாழும் 85 இலட்சம் பௌத்தர்கள் மெய் தேவனை கண்டு கொண்டு, அவரை சேவிக்க முன்வரும் படியும் ஜெபிப்போம்.

## 28. சீக்கியர்களுக்காக ஜெபிப்போம்

- இந்தியாவின் பஞ்சாபில் அதிகமாக வாழும் 2 கோடிக்கும் மேற்பட்ட சீக்கியர்கள் மெய் தேவனை கண்டு கொண்டு, அவரை சேவிக்க முன்வரும் படியும் ஜெபிப்போம்.

## 29. மத வெறியர்களுக்காக ஜெபிப்போம்:

- சுவிசேஷ எதிர்ப்பு இயக்கங்கள் மற்றும் மத வெறியர்கள் மனந்திரும்பும் படி ஜெபிப்போம்.
- இந்தியாவில் மத நம்பிக்கைகளின் அடிப்படையில் வெறுப்புணர்வை தூண்டி, வன்முறைகளை உருவாக்கி பிரிவினைகளை ஏற்படுத்தி வரும், மத வெறியர்களின் மனந்திரும்புதலுக்காகவும் இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்போம்.

## 30. வட இந்தியாவில் ஊழியம் செய்யும் கிறிஸ்தவ மிஷனரிகளுக்காக ஜெபிப்போம்

- மிஷனெரிகள் சரீர சுகத்தோடும். பெலனோடும் தேவனுடைய பணியைத் தொடர்ந்து சிறப்பாகச் செய்யும் படி ஜெபிப்போம்.
- எதிர்ப்போர் மத்தியில் ஞானத்தோடும், விவேகத்தோடும் நடந்து கொள்ளவும், எல்லாச் சூழ்நிலைகளிலும் கிறிஸ்துவின் அன்பு அவர்கள் மூலம் வெளிப்படவும், எதிர்ப்பாளர்களிடமிருந்து நம் மிஷனரிகள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.
- மிஷனரிகள் இறுதிவரை தேவன் பேரிலுள்ள விசுவாசத்திலும், அர்ப்பணிப்பிலும் நிலைத்து நிற்கவும், திரளான மக்களை கிறிஸ்துவண்டை வழிநடத்தி அநேக சபைகளை ஸ்தாபிக்கவும் ஜெபிப்போம்.